அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட சுக்கிலநத்தம், மீனாட்சிபுரம், திருவிருந்தாள்புரம், வெள்ளையாபுரம், ஆமணக்குநத்தம், கல்லுப்பட்டி, குளுந்தம்பட்டி, வதுவார்பட்டி, போடம்பட்டி ஆகிய கிராமங்களில் அருப்புக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திமுக முன்னாள் அமைச்சர் சாத்தூர் ராமச்சந்திரன் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து, என் தொகுதி மக்களுக்கு தேவையான அனைத்து பணிகளையும் செய்து கொடுப்பேன் என்று தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய சேர்மன் சுப்பாராஜ், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, செட்டிக்குறிச்சி பிராபகரன், திமுக ஒன்றிய செயலாளர்கள் பால கணேசன், பொன்ராஜ், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வேலுச்சாமி, மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் பாலசந்தர், வழக்கறிஞர் பாஸ்கரன், மாவட்ட சுற்றுச்சூழல் அணி துணை அமைப்பாளர் சுரேஷ், இளைஞர் அணி அழகு ராமானுஜம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழ்த்திரையுலகின் முன்னணி இயக்குநராக திகழ்ந்து மறைந்த இயக்குனர், தயாரிப்பாளர், நடிகர் கே.பாக்யராஜ் அவர்களின் இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள அவரின் திருவுருவப் படத்திற்கு கழக துணை பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் மு.பெ. சாமிநாதன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி அவரது மகன் சாந்தனுவுக்கு ஆறுதல் கூறினார். உடன் திருப்பூர் கிழக்கு மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கே.எஸ்.தனசேகர், தாராபுரம் நகர துணை செயலாளர் வி. கமலக்கண்ணன் உள்ளனர்.

முத்தமிழறிஞர் கலைஞர் 103வது பிறந்தநாளை முன்னிட்டு

திருப்பூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாபெரும் பொதுக்கூட்டம்!

திண்டுக்கல் ஐ.லியோனி–வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ.– க.செல்வராஜ் - கே.இ.பிரகாஷ்–டி.கே.டி.மு.நாகராசன் சிறப்புரை!

திருப்பூர், ஜூலை 4- முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு திருப்பூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் இன்று (04.07.2026 -சனிக் கிழமை) திருப்பூர், யூனியன் மில் சாலை, ஸ்ரீ சக்தி திரையரங்கம் அருகில் அமைந்துள்ள ஆட்டோ ரவி திடலில் மத்திய மாவட்ட இளைஞர் அணி ம.அசோக்குமார் தலைமையில் 35வது வட்ட செயலாளர் த.பரணி கார்த்திக், மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் வி.சரவணன் வரவேற்புரையில் தெற்கு மாநகர பொருளாளர், மாமன்ற உறுப்பினர் ஜி.முத்துக் கிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி ஆட்டோ.தங்கராஜ், தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் தெற்கு மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ்.ஆர்.ராஜ், தெற்கு மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ், மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் செ.ராஜசேகரன், மு.முகமது ஜுனைத், டி.சசி, ஈ.பாலசுப்பிரமணியம், தெற்கு மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சையது அபுதாஹிர், அரவிந்த், தமிழரசு, திருநாவுக்கரசு, விக்னேஷ், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர்கள்

கருவம்பாளையம் மு.ஜீவா, நல்லூர் சபரிஷ், முத்தனம்பாளையம் அ.மதிமாறன், வீரபாண்டி ச.பிரபு (எ) அன்னதானபிரபு, ஆண்டிபாளையம் சு. வேணுகோபால், ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர்கள்

திருப்பூர் தெற்கு கே.சரவணக்குமார், பொங்கலூர் கிழக்கு கோ.சிவசுப்பிரமணியம், பொங்கலூர் மேற்கு செ.லோகுபிரசாத், பல்டைம் கிழக்கு வெ. கௌதம், பல்லடம் மேற்கு ப.ராஜேஸ்வரன், பல்லடம் நகரம் த.தினேஷ்குமார், வட்டக் கழக நிர்வாகிகள் செயலாளர் கேபிள் தேவராஜ், அவைத்தலைவர் பழ.வீரப்பன், துணைச் செயலாளர்கள் அண்ணாதுரை, டி.ஆர்.செந்தில், சுபா, பிரதிநிதிகள் மயில்சாமி, மோகன் பாபு, திருமங்கலம் செல்வம், ராஜேந்திரன், ஆட்டோ மோட்டார் மாவட்ட பொதுச் செயலாளர் ஆட்டோ சுப்பிரமணி, பகுதி கழகப் பிரதிநிதிகள் ப.ஜெகநாதன், மகாலிங்கம், மாணவரணி முன்னாள் துணை அமைப்பாளர் புல்லட் சரவணன், மாவட்ட வர்த்தக அணி முன்னாள் துணை அமைப்பாளர் பிளக்ஸ் குமார், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் போலிஸ் சரவணன், தெற்கு மாநகர வர்த்தக அணி துணை என் பலர் போலீஸ் விஜய், மாவட்ட சிறுபான்மையினர் அணி துணை அமைப்பாளர் லிவிங்ஸ்டன், கோவில் பாலாஜி, விஜய் கணேஷ், நவின் கௌதம், இந்தாராமணி, சீனிவாசன், ஈஸ்வரன், ஆட்டோ பிரகாஷ், கார்த்தி ஜான், டேனி, ராஜேஷ், ஸ்டீபன், சூர்யா ஆகியோர் முன்னிலையில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி, கழக மேற்கு மண்டல பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வே.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ., திருப்பூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் க.செல்வராஜ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர், ஈரோடு பராளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், திருப்பூர் தெற்கு மாநகர செயலாளர் டிகேடி மு.நாகராசன்,

தலைமை செயற்குழு உறுப்பினர், திருப்பூர் மாநகராட்சி 3ம் மண்டலத் தலைவர் சி.கோவிந்தசாமி, வாலிபாளையம் பகுதி கழக செயலாளர், மாமன்ற உறுப்பினர் பி.ஆர்.செந்தில் குமார் ஆகியோர் சிறப்புரையாற்ற உள்ளனர். இக்கூட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சு.குமார், எஸ்.சேகர், ஜி.கே.நந்தினி, பகுதி கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள்

அ.பழனிச்சாமி, ஆ.அய்யப்பன், மு.க.உசேன், க. ஈஸ்வரமூர்த்தி,

தம்பி ப.குமாரசாமி, மு.நந்தகோபால், ப.முருகசாமி, அ.கோவிந்தராஜ், எஸ்.என்.குமார்,

ஒன்றிய கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள் ந.சோமசுந்தரம், க.கிருஷ்ணமூர்த்தி, பெ.அசோகன், ப.விஸ்வலிங்கசாமி, ச.பாலுச்சாமி, ரா.சிவாசலம், கே.பி.சீனிவாசன், ந.துரைமுருகன், ப.கு.கனகராஜ், நகர கழக செயலாளர் ந.ராஜேந்திரன், திருப்பூர் தெற்கு மாநகர கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் சிட்டிப.கணேசன், துணைச் செயலாளர்கள் பி.பாஸ்கரன், கோ.மகாலட்சுமி, தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மலர் மரகதம், மு. நாச்சிமுத்து, இரா.தங்கவேல், சலீம் (எ) அப்துல் ரஹ்மான், மு.ரபிதீன், எல்.எம்.மஸ்ஊது, மத்திய மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் சி. வடிவேல், ம.சூர்யா, ம. பார்த்திபன், து.கோபிநாத், ப.கலைச்செல்வி, ப.ஆனந்தி, த.தேவராஜ், கோ.ஆனந்தன், இரா. மணி, மு.அருள்பிரகாஷ், ப.சுப்ரமணியம், நிசார் அகமது, ரத்னசாமி, ச.ஜெகதீஸ், ப.ராம கிருஷ்ணன், கோ.மனோகர்பாபு, கே.ஆர்.எஸ்.மணி, பி. கே.பழனிச்சாமி, விஜய சிம்ம ராஜா, சி.செந்தில், பி.எ.சேகர் உள்பட மாநில, மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க உள்ளனர்.

டெல்லியைத் தாக்க சதி: 4 பயங்கரவாதிகள் கைது!

போலீஸ் அதிரடி!

புதுடெல்லி, ஜூலை 4 - பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ. அமைப்பின் ஆதரவோடு டெல்லியில் முக்கிய இடங்களை தாக்குதல் நடத்த திட்டமிட்ட சதி முறியடிக்கப்பட்டது. இது தொடர்பாக 4 பயங்கரவாதிகள் அதிரடியாக கைது செய்யப்பட்டுள்ளனர்.

டெல்லி போலீஸ் சிறப்பு பிரிவு தனிப்படை போலீசாருக்கு கிடைத்த உளவு தகவல்களின் அடிப்படையில் டெல்லி மற்றும் பஞ்சாபில் உள்ள பல்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் தீவிர சோதனைகளை நடத்தினர். இதில், டெல்லியில் தாக்குதலுக்கான இடங்களை வேவு பார்த்த ககன்பிரீத் என்பவனை டெல்லி போலீஸ் சிறப்பு பிரிவு அதிகாரிகள் கடந்த 24ம் தேதி டெல்லியில் கைது செய்தனர்.

அவன் கொடுத்த தகவலின் பேரில், பஞ்சாபின் அமிர்தசரஸ் நகரில் பதுங்கியிருந்த சுப்தீப் சிங் என்கிற விஷாலை துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் செல்போன்களுடன் போலீசார் கைது செய்தனர். மேலும், குர்ஜந்த் சிங் மற்றும் சாஜன் சிங் ஆகியோரும் அடுத்தடுத்து பஞ்சாப்பில் கைது செய்யப்பட்டனர். இவர்களிடம் இருந்து வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட 2 அதிநவீன துப்பாக்கிகள், 9 தோட்டாக்கள் மற்றும் 5 மொபைல் போன்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. 3 பேரிடமும் தனித்தனியாகவும், கூட்டாகவும் போலீசார் விசாரணை நடத்தினர்.

இதில், பாகிஸ்தானின் ஐஎஸ்ஐ உளவு அமைப்பின் ஆதரவோடு செயல்படும் பயங்கரவாதி ஷாசாத் பட்டி என்பவனின் வழிகாட்டுதலின்படி, டெல்லியில் முக்கிய இடங்களை குறிவைத்து பயங்கரவாத தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த அதிர்ச்சி தகவல் வெளியானது. மேலும், பாகிஸ்தானில் உள்ள ஐ.எஸ்.ஐ. ஆதரவு பெற்ற கையாளுநரான ஷாசாத் பட்டி, இந்தியாவில் உள்ள இளைஞர்களை சமூக வலைத்தளங்கள் மூலமாக கண்டறிந்து, அவர்களுக்கு பணம் மற்றும் போதைப் பொருள் ஆசை காட்டி மூளைச்சலவை செய்து தீவிரவாத பாதையில் இழுத்துள்ளான் என்பது தெரியவந்தது.

கைதான சுப்தீப் சிங், குர்ஜந்த் சிங் ஆகியோர் பஞ்சாபின் சர்வதேச எல்லை பகுதிக்கு அருகில் வசிப்பவர்கள். பாகிஸ்தானில் இருந்து ட்ரோன்கள் மூலம் போடப்படும் அதிநவீன ஆயுதங்கள் மற்றும் ஹெராயின் உள்ளிட்ட போதைப்பொருட்களை பெற்று, அவற்றை விற்று பணமாக்குவது மற்றும் தாக்குதலுக்கு பயன்படுத்துவதுதான் இவர்களது வேலை. டெல்லியில் கைது செய்யப்பட்ட ககன்பிரீத், பாகிஸ்தான் கையாளுநர்களின் நேரடி உத்தரவின் பேரில் டெல்லியில் உள்ள முக்கிய காவல் நிலையங்கள் மற்றும் வழிபாட்டு தலங்களை ரகசியமாக வீடியோ எடுத்து, 'மறைக் குறியீடு செய்யப்பட்ட' செயலிகள் மூலம் பாகிஸ்தானுக்கு அனுப்பியுள்ளான்.

மேலும், டெல்லியின் முக்கிய பகுதியில் துப்பாக்கிச் சூடு நடத்தி, அங்குள்ள காவல் துறையினரை குறிவைக்கவும், இதன் மூலம் டெல்லி என்சிஆர் பகுதியில் பெரும் அமைதியின்மையை உருவாக்கவும் இவர்களுக்கு பாகிஸ்தானில் இருந்து 'ஷாசாத் பட்டி' கட்டளையிட்டுள்ளதும் தெரியவந்துள்ளது.

இதையடுத்து போலீசார் வழக்கு பதிவு செய்து கைதான 4 பேரிடமும் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.74,781 கோடி இழப்பு !

பெட்ரோல் - டீசல் விலை குறைக்க வாய்ப்பு இல்லை!

ஒன்றிய அமைச்சர் அறிவிப்பால் பரபரப்பு!

புதுடெல்லி,ஜூலை 4- மேற்காசிய போர் நெருக்கடி காரணமாக இந்திய எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.74,781 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளதால் பெட்ரோல், டீசல் விலை குறைய 2 அல்லது 3 மாதங்கள் ஆகலாம் என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. டெல்லியில் நேற்று செய்தியாளர்களை சந்தித்த ஒன்றிய பெட்ரோலியத்துறை அமைச்சர் ஹர்தீப் சிங் பூரி கூறியதாவது: சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தாலும், மேற்காசிய போரின்போது வாங்கப்பட்ட எரிபொருளை இந்திய நிறுவனங்கள் அதிக விலை கொடுத்தே சுத்திகரித்து வருகின்றன.

எரிபொருள் உற்பத்திக்கான மூலப்பொருளான கச்சா எண்ணெய்யை எண்ணெய் நிறுவனங்கள் வழக்கமாக குறைந்தது இரண்டு மாதங்களுக்கு முன்பே கொள்முதல் செய்கின்றன.

எனவே, தற்போது சுத்திகரிக்கப்படும் கச்சா எண்ணெய் என்பது, சர்வதேச விலை மிக அதிகமாக இருந்த ஏப்ரல் அல்லது மே மாத தொடக்கத்தில் வாங்கப்பட்டது. ஜூன் 30ம் தேதி வரை அடக்க விலையை விட குறைவான விலையில் பெட்ரோல், டீசல் மற்றும் எல்பிஜி ஆகியவை விற்பனை செய்யப்பட்டதால் எண்ணெய் நிறுவனங்களுக்கு ரூ.74,781 கோடி இழப்பு ஏற்பட்டுள்ளது.

சர்வதேச கச்சா எண்ணெய் விலைகள் குறைந்துள்ளன. ஆனால் இரண்டு மாதங்களுக்கு முன்பு (அப்போதைய விலையில்) வாங்கிய கச்சா எண்ணெய் இருப்பையே நாங்கள் இன்று பயன்படுத்துகிறோம். இந்த விலை சரிவு 2 3 மாதங்களுக்குத் தொடர்ந்தால், அப்போது பார்க்கலாம். ஆனால் இது ஒரு அனுமான நிலை மட்டுமே. வளர்ச்சியடைந்த நாடுகளில் பெட்ரோல் விலை உயர்வு சுமார் 20 சதவீதமாகவும், இந்தியாவின் அண்டை நாடுகளில் சுமார் 35 சதவீதமாகவும் இருந்த நிலையில், நெருக்கடியின் போது இந்தியாவில் பெட்ரோல் விலை உயர்வு வெறும் 5.58 சதவீதமாக மட்டுமே இருந்தது.

கடந்த நான்கு மாதங்களில் நெருக்கடியான கால கட்டத்தில் பெட்ரோல் விலையை லிட்டருக்கு 5 ரூபாய் வரை உயர்த்தியிருந்ததால்தான், நயாரா நிறுவனம் இப்போது விலையைக் குறைத்துள்ளது.

அவர்கள் அந்த விலை உயர்வைத்தான் இப்போது திரும்பப் பெற்றுள்ளனர்; அதாவது, அந்த விலையை மட்டுமே குறைத்துள்ளனர். அதே வேளையில், அரசுக்குச் சொந்தமான எண்ணெய் சந்தைப்படுத்தல் நிறுவனங்கள் அந்த நேரத்தில் விலையை உயர்த்தியிருக்கவில்லை. இவ்வாறு தெரிவித்தார்.

தென்மேற்கு பருவமழை தீவிரம் !

வடமாநிலங்களில் கொட்டித் தீர்க்கும் கனமழை!

மும்பை, ஜூலை 4- நாட்டின் வட மாநிலங்கள் மற்றும் வட மேற்குப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தீவிர மடைந்துள்ளது. கடந்த ஜூன் மாத முதல் பாதியில் நிலவிய மழை பற்றாக்குறையைத் தொடர்ந்து, ஜூன் 29 முதல் பருவமழை தீவிர மடைந்து உள்ளது.

தற்போது தலைநகர் டெல்லி, மும்பை உள்ளிட்ட பல வட இந்தியப் பகுதிகளில் தென்மேற்குப் பருவமழை தீவிரமாக உள்ளதோடு, அடுத்த சில நாட்களுக்குக் கனமழை நீடிக்கும் என்றும் இந்திய வானிலை ஆய்வு மையம் (IMD) அறி வித்துள்ளது.

தென்மேற்கு பருவமழை காரணமாக பல வட மாநிலங்களில் கனமழை கொட்டி தீர்க்கிறது. மும்பையில் பலத்த காற்றுடன் பெய்த கன மழையால் முக்கிய சாலை கள் குளம் போல் மாறின.

டெல்லி, மகாராஷ்டிரா, கோவா, கொங்கன், தெற்கு குஜராத் மற்றும் மத்திய இந்தியாவின் சில பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு மிக கனமழை தொடரும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதனிடையே தென்மேற்கு பருவமழை இமாச்சல பிரதேசத்தில் ஜூலை 1 ஆம் தேதி முதல் தொடங்கி இருக்கிறது.

இந்த பருவமழை வழக்க மாக ஜூன் 25ல் அங்கு தொடங்கும், ஆனால் நடப்பாண்டில் சுமார் ஆறு நாட்கள் தாமதமாக துவங்கியுள்ளது. மேலும் உத்தர கண்ட், ஜம்முகாஷ்மீர் மற்றும் லடாக் ஆகிய பகுதிகள் முழுவதையும் பருவமழை சூழ்ந்துள்ளது.

தலைநகர் டெல்லியை பொறுத்த வரை பருவமழை காரணமாக இடி, மின்னலுடன் கூடிய பரவலான கனமழை பெய்து வருகிறது.

அதே நேரம் பருவமழையின் அடுத்தகட்ட நகர்வாக ராஜஸ்தானின் பல பகுதிகளில் மழைப் பொழிவு அதிகரித்துள்ளது.



முத்தமிழறிஞர் கலைஞரின் 103 வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டம், ரத்தனபுரி பகுதி, 47 வது வட்ட கழக பொறுப்பாளர் பூபாலன் ஏற்பாட்டில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாநகர் மாவட்ட பொறுப்பாளர் துரை.செந்தமிழ்ச் செல்வன் மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தி ஏழை, எளிய மக்களுக்கு அறுசுவை உணவினை வழங்கினார். இதில் லோகு, மீனா லோகு, மணல் மகேஸ்வரன், ஆறுமுகம், ராமசாமி, செங்குட்டுவன், உள்பட மாநில, மாவட்ட, பகுதி வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

எம். கிருஷ்ணன்
ஜூலை 4 (2022)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக்கொண்டு பணியாற்றியவர்.

மாதவரத்தில் நாற்பது ஆண்டுகள் வட்டச் செயலாளராகவும், மாவட்ட பிரதிநிதியாகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம் போன்ற பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.